திரு. கே. என். குமாரசாமி : சார், அந்த வழித்தடங்கள் பஸ் போக்குவரத்துக்கு உட்பட்டிருப்பதால், மழை காலங்களில் பள்ளங்களில் தண்ணீர் வந்தால், இரண்டு, மூன்று மணிநேரம் வரையில் போக்கு வரத்துக்கள் நிறுத்தப்படுகின்றன. ஆகவே, இந்தப் பாலங்களைக் கட்ட முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் கஷ்டங்களை நானும் உணர்கிறேன். அதையெல்லாம் மறு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. கோமதி சங்கர திட்சிதர் : சபாநாயகர் அவர்களே, கழிந்த செப்டம்பர் மாதம் 3-ம் தேதி முதல் அமைச்சர் அவர்களால் அஸ்திவாரக் கல் போடப்பட்ட அம்பாசமுத்திரம் திட்டத்தை முடிப்பதில் தாமதம் ஏற்படுவதால், விவசாயிகளுக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த வேலையை தொடர்ந்து செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி கோவை மாவட்டம் பற்றியது. திருநெல்வேலி வெகு தூரத்தில் இருப்பதால் அது பற்றிய விவரம் இல்லை.

பஞ்சாயத்து ஒன்றிப்புகளிலுள்ள நியமனக்குழுக்கள்.

*223 வினா. **திருமதி வி. ப. பழனியம்மாள் :**
திரு. பி. வெங்கடசாமி : } மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியனில் உள்ள Appointment Committee-ல் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திருமதி வி. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, பெரும்பாலான தொகுதிகளில், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் இடையே உறவு முறை சரியாக இல்லை. ஆசிரியர்கள் நியமனத்தின்போது உள்ளூர் அரசியல் காரணமாக ஆசிரியர் பயிற்சி பெற்ற சிலர் பாதிக்கப் படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இனியாகிலும் சட்ட மன்ற உறுப்பினர்களையும் நியமிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1958-ம் ஆண்டு ஊராட்சி சட்டத்தின் 53-வது பிரிவின்படி இதிலே சட்ட மன்ற உறுப்பினர்கள் இடம் பெற வழி இல்லை. ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கும் சட்ட மன்ற உறுப்பினருக்கும் உறவு முறையை அவர்களே தான் சரிசெய்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு நாட்களுக்கு முன்பு தான் இந்தக் கேள்வி வந்து விரிவாகப் பதில் கொடுக்கப் பட்டிருக்கிறது.

Municipal Chairman, Kancheepuram

* 224. *Q.*—THIRU N. S. V. CHITHAN :
THIRU K. VINAYAKAM : } Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the attention of the Government has been drawn to the no-trust move against the Chairman of the **Kancheepuram** Municipality, in May 1968?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.